THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

**அக்டோபர் 2022 (மடல் – 22) செய்தி - 9**

"உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" (சங்கீதம் 37:5).

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 7 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 20 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |




# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டவருடைய பெரிதான கிருபையினாலே இந்த ஆண்டில் ஒன்பது மாதங்களை நிறைவு செய்து பத்தாவது மாதத்தை காணச் செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதத்திலும் ஆண்டவர் தரும் நம்பிக்கையின் செய்தி.

**"உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" (சங்கீதம் 37:5).**

**"Give yourself to the Lord; trust in him and he will help you" (Psalms 37:5).**

அன்புக்குரியவர்களே, நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் கர்த்தர் ஓர் உன்னதமான திட்டத்தை வைத்திருக்கிறார். நம்மை படைத்த ஆண்டவர் நம்மை எவ்வாறு நடத்த வேண்டுமென்பதை நன்கு அறிந்தவராக இருக்கின்றார். நாம் அறிவீனரும், பெலவீனருமாய் இருக்கின்றோம். அவர் நம்மை நடத்தும்பொழுது இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். அவர் எப்படியெல்லாம் நம்மை வழிநடத்துவார் என்பதை தியானிப்போம்.

### கர்த்தருடைய கரங்களில் நம்மை பூரணமாய் ஒப்புவிப்போம்

"உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்"(சங்கீதம் 37:5).

மேய்ப்பனின் சத்ததிற்கு செவிகொடுத்து, பூரணமாய் பின்பற்றும் ஆடுகளை மேய்ப்பன் நடத்துகிறான். ஆடுகளை நடத்த வேண்டிய பொறுப்பு மேன்மையுடையது. அவனே ஆடுகளுக்கு மேய்ச்சல், தண்ணீர், இளைப்பாறுதல், பாதுகாப்பு முதலியவற்றிற்காக கவலைப்படுகிறான். அது போலவே நமது நல்ல மேய்ப்பராகிய நமது ஆண்டவரும் நம்மை பாதுகாக்கிறார். அது மட்டுமல்லாது, நம்மை நல் வழியிலே நடத்துவார்.

### கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருப்போம்

"உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" (சங்கீதம் 37:5).

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஆடுகளின் பரம தந்தையாயிருக்கிறார். அவர் நமது கஷ்டங்களையும், பாடுகளையும், கவலைகளையும் நம்முடைய எதிர்பார்ப்புகளையும் அறிந்திருக்கிறார். நம்முடைய அனைத்து காரியங்களையும் அவருடைய வலதுகரத்தில் ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிருக்கும்போது அவர் நம்மை ஆசீர்வதிப்பார். தொடர்ந்து, "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3) என்ற கர்த்தரின் வார்த்தையை நம்முடைய அனுபவமாக மாற்றிக்கொள்வோம்.

**கர்த்தரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்**

நாம் நினைத்தபடி அல்ல, கர்த்தர் நினைத்தபடி கர்த்தருடைய வேளை வரும்பொழுது நமது காரியங்களை கர்த்தர் வாய்க்கப்பண்ணுவார். அது நமது கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கும். ஆம், கர்த்தர் நமக்காக யாவற்றையும் செய்து முடிப்பார்.

அன்புக்குரியவர்களே, இந்த புதிய மாதத்திலும் ஆண்டவரின் வார்த்தையின்படியே, "உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." ஆண்டவரின் வார்த்தைகு உண்மையாய் கீழ்ப்படிவோம். ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
*அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார்.* C

## போராட்டமும் கொண்டாட்டமும்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்போடு கூட வாழ்த்துகின்றோம். ஆண்டவரது பெரிதான கிருபையினால் ஒன்பது மாதங்களைக் கடந்து, புதிய மாதத்திற்குள் பிரவேசித்துள்ளோம். இம்மட்டும் நம்மை, ஆசீர்வதித்து, பாதுகாத்து, வழிநடத்தி வந்த கர்த்தருக்கு நாம் குடும்பமாய் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துவோம். பிரியமானவர்களே, கடந்த மாதங்கள் முழுவதும் நாம் எஸ்தரின் புத்தகத்தை ஆழமாய் தியானித்து அநேக காரியங்களை ஆண்டவரின் வழிநடத்துதலோடு கற்று வருகின்றோம். அதன் தொடர்ச்சியாக இம்மாதம், "விந்தை மாற்றங்களில் போராட்டமும், கொண்டாட்டமும்" என்ற தலைப்பில் தியானிக்கலாம்.

பிரியமானவர்களே, இரண்டாம் நாள் விருந்துக்கு ஆமான் வர தாமதமாயிற்று. முந்தைய நாள் சம்பவம் தந்த குழப்பத்தில் ஆமானும், குடும்பத்தினரும் ஆழ்ந்திருந்ததால் கால தாமதமானது. இராஜாவின் பிரதானிகளோ ஆமானை விருந்துக்கு துரிதப்படுத்தினர். இந்த அழைப்பும், எஸ்தர் ராணி படைத்த விருந்தும் மொர்தெகாயை நகர் வலம் கொண்டு வந்த கோபத்தை ஆமானிற்கு தணியச் செய்தது. கசப்பான நினைவுகளை விழுங்கி, வயிறு முட்ட சாப்பிட்டுத் திருப்தி காணும் வேளையில் திராட்சை ரசம் பரிமாறப்பட்டது. அரசர் மறுபடியும் எஸ்தரிடம் உன் விருந்திற்கான காரணம் நீ சொல்லவேயில்லையே. உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார். இனியும் அரசரப் பொறுமை இழக்கச் செய்ய மனமின்றி எஸ்தர் தன் வேண்டுதலை பொறுக்கி எடுத்த வார்த்தைகளால் தெளிவுபடுத்துகிறாள்.

" அப்பொழுது இராஜாத்தியாகிய எஸ்தர் பிரதியுத்தரமாக, "ராஜாவே, உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைத்தது. ராஜாவுக்கு சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக. எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம். அடிமைகளாகவும், வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப் போனாலும் நான் மவுனமாயிருப்பேன். இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ண முடியாது" என்றாள் (எஸ்தர் 7:3,4).

இதை வேறோரு வேதாகம மொழிபெயர்ப்பு இன்னும் தெளிவாய்க் கூறுகிறது. "என் மக்களும் நானும் கொலையுண்டு அழிந்து ஒழிந்து போகும்படி விலை பேசப்பட்டிருக்கிறோம். நாங்கள் அடிமைகளாய் விற்கப் பேசப்பட்டிருக்கிறோம். நாங்கள் அடிமைகளாய் விற்கப்பட்டிருந்தால் கூட நான் மவுனமாய் இருந்திருப்பேன். ஆனால் மன்னருக்கு உண்டாகும் இழப்பிற்கு எதிரியாய் ஈடு செய்ய முடியாது" என்று எஸ்தர் கூறுகிறாள்.

ஆம் மவுன மங்கை மவுனம் கலைத்தாள். கர்த்தரின் வேளைக்காய் காத்திருந்தவள், இது தான் கர்த்தரின் வேளை என்று உணர்ந்து பேசுகின்றாள்.

இதையெல்லாம் கேட்டு, அரசர் அதிர்ச்சியுற்று காரணம் யார் எனக் கேட்க, ஆமான் என்ற பதில் கேட்டு மேலும் அதிர்ச்சியடைந்தார். கோபத்துடன் திராட்சரசப் பந்தியை விட்டு எழுந்தார். தன் நம்பிக்கைக்கு பாத்திரமான ஆமானா? தன்னால் எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி வைக்கப்பட்ட ஆமானா இப்படி செய்தது? அநேக சிந்தனை ராஜாவின் எண்ணத்தில் தோன்ற, ஆமானா நம்பிக்கை துரோகி என்று நம்ப முடியாமல் சிந்தனை சிதறல்களோடு அகாஸ்வேரு ராஜா அரண்மனை தோட்டம் சென்றார்.

தெளிவு பிறக்கவில்லை. மனம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. நம்ப மனம் இடம் தரவில்லை. ஒன்றும் புரியாமல் மறுபடியும் திராட்ச ரசம் பரிமாறப்பட்ட இடத்துக்கே திரும்ப வந்தார். வந்தவருக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது. என்ன அதிர்ச்சி அது?

"ராஜா அரண்மனைத் தோட்டத்திலிருந்து திராட்சரசம் பரிமாறப்பட்ட இடத்துக்கு திரும்பி வருகையில், எஸ்தர் உட்கார்ந்திருக்கிற மெத்தையின் மேல் ஆமான் விழுந்து கிடந்தான்" (எஸ்தர் 7:8).

ஆமானின் இந்த செயல் மன்னரை எரிச்சலாக்கியது. கோபப்படுத்தியது. எதிர் உத்தரவைப் பெற்றுத் தந்தது.

"நான் அரண்மனையிலிருக்கும்போதே என் கண்முன்னே இவன் ராஜாத்தியைப் பலவந்தம் செய்ய வேண்டுமென்றிருக்கின்றானோ" என்றார் ( எஸ்தர் 7:8).

ராஜாவின் இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்து பிறந்தவுடனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள். ஆமானின் தண்டனை உறுதியாகி விட்டது. பிரதானி ஒருவன் வேகமாய், மொர்தெகாய்க்காக ஆமான் தயார் செய்த

தூக்குமரம் பற்றி ராஜாவிடம் தெரிவிக்க, "அதிலே அவனைத் தூக்கிப் போடுங்கள்" ஏன்ற அதிரடி உத்தரவு பிறந்தது.

செய்யப்பட்ட தூக்குமரத்தில் மொர்தெகாய் இழுத்து வரப்படுவது போலவும், தூக்கிலிடப்படுவது போலவும், தங்கள் மனக்கண்களில் இரசித்துக் கொண்டிருந்த ஆமானின் வீட்டாரின் கண்களுக்கு முன்பாக ஆமான் தூக்கிலிடப்பட்டது என்ன ஒரு விந்தை மாற்றம்!

ஆம் பிரியமானவர்களே! "மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்" கலா. 6:7.

தான் வெட்டின குழியில் தானே விழுந்தான். ஒரு தூக்குமரம் செய்து கொண்டாடினான் ஆமான். ஆனால் அவன் ஏற்படுத்தின தூக்குமரம் அவனுக்கு போராட்டமாகி விட்டது.

பிரியமானவர்களே, சங்கீதம் 37:1,2-ன் படி, "பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே. நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு பசும்பூண்டைப்போல் வாடிப் போவார்கள்."

துன்மார்க்கர் தழைத்ததில்லை. புல்லைப்போல தழைத்து சீக்கிரமாய் அறுப்புண்டு போவார்கள்.

எனவே கர்த்தரின் பிள்ளைகளாகிய நாம் நல்ல எண்ணங்களோடு, அநேகருக்கு உதவும் சிறந்ததை செய்யும் பாத்திரங்களாய் இருப்போம்.

ஆண்டவர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

- **தொடரும்**

இப்படிக்கு
உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்
**திருமதி. *ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***
**ஆயரம்மா**

# மகிமை தங்கிய ஆசரிப்புக் கூடாரம்



தேவன் மோசேக்கு ஆசரிப்புக் கூடாரத்தை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை மிகவும் கிரமமாக ஒரு கட்டிட வடிவமைப்பாளராக தெளிவாக யாத். 30-ம் அதிகாரத்தில் கூறுகிறார். கர்த்தர் தனக்கு கற்பித்தபடியெல்லாம் மோசே செய்து முடித்தார். ஒவ்வொரு காரியத்தையும் '***கர்த்தர் கற்பித்தபடியே*** மோசே செய்ததாக அந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அனைத்து வேலைகளையும் மோசே முடித்தபோது, ஒரு மேகம் ஆசரிப்பு கூடாரத்தை மூடியது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது (யாத்.30:34,35).

தேவனுடைய சொற்படி ஆசரிப்புக் கூடாரத்தின் காரியத்தை செய்து முடித்தபோது தேவ பிரசன்னம் அக்கூடாரத்தை நிரப்பிற்று. அந்த பிரசன்னம் தொடர்ந்து மேக ஸ்தம்பமாகவும், அக்கினி ஸ்தம்பமாகவும் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினது.

தேவன் தங்கும் ஆலயமாகிய, ஆசரிப்பு கூடாரமாகிய நம்முடைய சரீரமும் இயேசுவின் கட்டளைப்படி பரிசுத்தமாய் காக்கப்பட வேண்டும். அப்படி தேவ வார்த்தையின்படி அது முழுமையாக காக்கப்பட்டால், தூய ஆவியானவர் அதில் வாசம் பண்ண முடியும். அப்போது பரிசுத்த ஆவியானவர், நாம் எங்கு, எப்போது, எப்படி செல்ல வேண்டும் என்று நமக்கு போதித்து நடத்துவார். நம்மிடம் பரிசுத்தம் இல்லையேல் தேவன் எழுந்தருளும் கூடாரமாக நாம் விளங்க முடியாது. அந்நிலை ஏற்பட்டால், நம் வாழ்க்கை ஒரு குருட்டாட்டமுள்ள வாழ்க்கையாக மாறிவிடும்.

உயிருள்ள பரிசுத்த தேவன் நம்மோடு வாசம்பண்ண, நம்மை தகுதியுள்ளவர்களாக்கும்படி நாம் ஆண்டவரிடம் அனுதினமும் மன்றாடுவோம். நாம் அவ்வாறு மாறும்போது, நம் திருச்சபையும் ஆண்டவரின் மகிமையைக் காணும். நம் திருச்சபையின் சாட்சி அனைவரையும் ஆண்டவரிடம் கொண்டுவரும்.

**ஜெபசீலி ஆசீர்**

வேதாகமப் பெண்கள்

## சேபாவின் ராஜ ஸ்திரீ

[1 இராஜாக்கள் 10:1-13]

நமது கவனத்தை ஈர்க்கும் ராஜஸ்திரீ எத்தியோப்பியாவிலுள்ள சேபாவை சேர்ந்தவள் என கருதுகின்றனர். இவளது சரியான பெயர் வேதாகமத்தில் எழுதப்படவில்லை. பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்ந்த சேபாவின் ராணி, சாலமோனின் ஞானம், கீர்த்தி ஆகியவற்றை கேள்விப்பட்டு சாலமோனின் ஞானத்தை விடுகதைகளினால் சோதிக்க ஆவல் கொண்டாள். தனது பொறுப்புகள், பிரயாண வசதியின்மை இவற்றைப் பெரிதாக எண்ணாமல் மிகுதியான விலையுயர்ந்த வெகுமதிகளோடு சாலமோனை சந்திக்க எருசலேமுக்கு வந்தாள். தன் மனதில் இருந்த எல்லாவற்றையும் குறித்து சாலமோன் ராஜாவிடம் சம்பாஷித்தாள். அநேக விடுகதைகளை விடுத்தாள். ராஜாவும் அவள் கேட்டவற்றிற்கெல்லாம் பதிலளித்து விடுவித்தான். எருசலேமுக்கு வந்த அவள், சாலமோனின் ஞானத்தை மட்டுமல்லாமல், சாலமோனின் அரண்மனை, பந்தியின் போஜன பதார்த்தங்கள், ஊழியக்காரரின் வீடுகள், உத்தியோகஸ்தரின் வீடுகள், வரிசைகள், பானபாத்திரக்காரர், ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் நடைமண்டபம் எல்லாவற்றையும் நேரடியாக பார்த்து மிகவும் ஆச்சரியத்தால் பிரமைக் கொண்டாள். ராஜாவிடம், "நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உம்முடைய ஞானமும், செல்வமும் அதிகமாயிருக்கிறது. உம்முடைய ஜனங்களும், உமக்கு முன் நின்று உம்முடைய ஞானத்தைக் கேட்கிற ஊழியக்காரரும் பாக்கியவான்கள் என்று போற்றினாள். சாலமோனை ராஜாவாக்கிய கர்த்தரை ஸ்தோத்தரித்தாள். இஸ்ரவேலர் மீது தேவன் பாராட்டின அன்பிற்காக துதித்தாள். ராஜாவுக்கு தான் கொண்டு வந்த நூற்றிருபது தாலந்து பொன், கந்தவர்க்கங்கள், ரத்தினம் இவற்றை பரிசாகக் கொடுத்தாள். பெற்றுக்கொண்ட ராஜா அவளுக்கு வெகுமதிகள் கொடுத்ததோடு அவள் விருப்பப்பட்டுக் கேட்ட எல்லாவற்றையும் கொடுத்தான். பின்பு அவள் பரிவாரத்தோடே தன் தேசத்திற்கு திரும்பிப் போனாள்.

பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும் சாலமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாக இருந்தான். இந்த ஞானத்தை அவனுக்கு கொடுத்தது யார்? ஆண்டவர். சாலமோனிலும் பெரியவரான இயேசுகிறிஸ்துவே ஞானத்தின் உறைவிடம். அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.

தென் தேசத்து ராஜஸ்திரீ சாலமோனின் ஞானத்தைக் கேள்விப்பட்டதுமல்லாமல், அதை முழுமையாய் அறியவும் பிரயாசப்பட்டு, பல மைல்கள் பிரயாணம் பண்ணி நேரில் பார்த்து, தான் கேள்விப் பட்டதைப் பார்க்கிலும் சாலமோன் அதிக ஞானம் உள்ளவர் என்பதை அறிந்தாள். அதேப் போல சாலமோனைக் காட்டிலும் பெரியவரான இயேசுகிறிஸ்துவை அதிகமாக, ஆழமாக அறிய நாம் அதிகமான நேரத்தை வேதம் வாசிப்பதிலும், தியானிப்பதிலும், ஜெபிப்பதிலும் செலவிட வேண்டும். சேபா ராணி ராஜாவிடம் தான் விரும்பியதைக் கேட்டு பெற்றுக்கொண்டது போல நாமும் சாலமோனிலும் பெரியவரான இயேசுகிறிஸ்துவிடம் ஞானத்தையும், தேவைகளையும் கேட்டுப் பெற்றுக்கொள்வோம்.

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

## நவம்பர் மாத தலைப்பு
## நன்றி செலுத்துதல்
## [Thanksgiving]

# CHILDREN'S CORNER

Dear Children,

The theme for the month of October is – "**CHURCH**".




The Church is more than a building.

it is a gathering of all the people who belive in Jesus Christ as their Savior.

## EARLY CHURCH



The first Christians gathered together regularly to hear people teach about Jesus.

They spent time together as friends. They shared meals and prayed together.

They helped each other and were generous. They worshiped God together.

Even though the things in the Bible happened a long time ago, the same things happen at church today.



## THE CHURCH TODAY

Today the Church helps us to **connect to Jesus**. John 15:4-5

The Church helps us to **connect to other Christians.** Hebrews 10:24

The Church helps us to **find and use our spirirtual gifts.** Philippians 2:1-2

# THE BOOK OF HEBREWS

**Author** – Unknown

**Date** – AD 66

**Chapters** – 13

**Key People** – Jewish Christians

The book of Hebrews shows Jesus Christ as the perfect High Priest, the Son of God, and the promised Messiah.

A common theme throughout Hebrews is the reminder that, even in moments when things seem most dark, you do not struggle alone

It was written to the early Jewsih Christians living in Antioch.

## SOME LESSONS FROM THE BOOK OF HEBREWS

### 1. Meet Other Believers Regularly




Let us not give up meeting together, as some are in the habit of doing, but let us encourage one another—and all the more as you see the Day approaching.
– Hebrews 10:25 NIV

### 2. Encourage One Another




But encourage one another daily, as long as it is called "Today," so that none of you may be hardened by sin's deceitfulness.
– Hebrews 3:13 NIV

### 3. Hold Onto Hope




Let us hold unswervingly to the hope we profess, for he who promised is faithful.
— Hebrews 10:23 NIV

### 4. Persevere In The Race




Therefore, since we are surrounded by such a great cloud of witnesses, let us throw off everything that hinders and the sin that so easily entangles, and let us run with perseverance the race marked out for us.
— Hebrews 12:1 NIV

## TINY TOTS SECTION

### COLOR IN...



## What Does Not Belong?

**INSTRUCTIONS:** Circle the 10 things that do nor belong in the picture.



**In the fun picture beside, a church is being built… circle 10 things that do not belong.**

## Who Worshiped God?

**INSTRUCTIONS:** Circle the men who are not worshiping the gold statue. How many are there?



**Many times God's people do not have the freedom to worship God. In the picture on the right, circle the people who chose not to worship the statue, but to worship God.**



**The bible says - Do not give up meeting together... but encourage one another (Hebrews 10:25)**

**Help the 2 children find their way to church.**




**Ps. 62:11 says that power belongs to God.**

**Matthew 18:20 says, where two or three gather in my (God's) name, there am I with them.**

**Who is your source of power? ________.**

**SPOT 10 DIFFERENCES in the early church below...**



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION from the book of Hebrews

1. How has God spoken in these last days? (1:1-2)

| | | | |
|---|---|---|---|
| a. | By his apostles | b. | By his Son |
| c. | By prophets | d. | By Priests |

2. Why did those to whom it was first preached NOT enter into His rest? (4:6)

| | | | |
|---|---|---|---|
| a. | Unbelief | b. | Idolatry |
| c. | Rebellion | d. | Murmuring |

3. How are we encouraged to come to our High Priest? (4:16)

| | | | |
|---|---|---|---|
| a. | Boldly | b. | Meekly |
| c. | Prayerfully | d. | Faithfully |

4. What is impossible for God to do? (6:18)

| | | | |
|---|---|---|---|
| a. | Hate | b. | Get angry |
| c. | Lie | d. | Destroy |

5. What is the anchor of the soul? (6:18-19)

| | | | |
|---|---|---|---|
| a. | Faith | b. | Hope |
| c. | Love | d. | Peace |

6. Where is the new covenant written? (8:8-10)

| | | | |
|---|---|---|---|
| a. | On tablets of stone | b. | In the hearts of the people |
| c. | On the walls of the temple | d. | In the pages of the Bible |

7. Without what is there no remission of sins? (9:22)

| | | | |
|---|---|---|---|
| a. | Faith | b. | Repentance |
| c. | Receiving the Holy Spirit | d. | Shedding of Blood |

8. How shall the just live? (10:38-39)

| | | | |
|---|---|---|---|
| a. | By Faith | b. | By Hope |
| c. | By Charity | d. | By Grace |

9. Who gave a commandment concerning his bones? (11:22)

| | | | |
|---|---|---|---|
| a. | Abraham | b. | Jacob |
| c. | Joseph | d. | Moses |

10. What is said about Jesus regarding our faith? (12:2)

| | | | |
|---|---|---|---|
| a. | The author and finisher | b. | The beginning and the ending |
| c. | The captain of our faith | d. | The source |

11. For whom the Lord loveth he_____________ (12:6)

| | | | |
|---|---|---|---|
| a. | Blesses | b. | Chastens |
| c. | Leads | d. | Rewards |

12. Who had recently been set free? (13:23)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| a. | Timothy | b. | Paul | c. | Onesimus | d. | Apollo |

## Jesus Started the Church

When Jesus said, "I will build my church," he was talking about the church of all Christians.

If you are a Christian, you belong to Jesus' church.



## Local Churches

After Jesus went back to heaven, Paul and other Christians traveled around, telling people about Jesus and starting local churches in the towns they visited. A local church is a group of Christians that live in the same area and meet together to worship and do God's work.

Look up the verses, read them, and complete the statements about churches.

| | |
|---|---|
| Ephesians 1:16 | Paul ______________ for the churches he had started. |
| Acts 15:36 | Paul went back and ______________ the churches he had started. |
| Hebrews 10:25 | Don't forget to ____________ together as a church. |
| 1 Corinthians 16:2 | Give an offering of ________________ each Sunday. |
| Acts 14:23 | Each church had church _________________. |

Word List: leaders, meet, money, prayed, visited

## Your Church

What is the name of your church?

Who is the pastor of your church?

Who are some other people in your church?

What do you do when your church meets together?




## Help these children make the right choices on their way to CHURCH...



@ 2015 by Scott Greer. All rights reserved. Used by permission.

**When Jesus spoke in the synagogue, some people did not believe him. They asked, 'Isn't he the carpenter's son?'.**

**When we attend church every week, do we listen to hear God speaking to us?**







**We need to remove the things that distract us, and keep us from worshiping our Lord...**

## WHY DO WE GO TO CHURCH?

https://www.youtube.com/watch?v=dxBqcPgx6z0




## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below…

1. The theme for the month of October is: ____________________.
2. The church today helps us - ____________________________________________
   ____________________________________________
   ____________________________________________.
3. The book of Hebrews has ______________ chapters.
4. Hebrews 10:25 says - __________________________________________________
   ______________________________________________________________________
   ______________________________________________________________________
5. Fill in the blanks from the video above – Why do we go to church?
   a. We go to church to _______________ God together with other Christians.
   b. We learn more about our heavenly ____________ and how to ___________ him.
   c. Galatians 6:2 tells us to - ______________________________________________.
   d. It is a blessing to study God's word by ____________ and ____________ together.
   e. We don't need a __________________________ to worship our heavenly Father.
   f. _____________________________________________ is one way to praise God.

Children, let us prioritize attending church regularly. May the Holy Spirit work in our hearts to build up our church for His glory.

God bless,

**Mrs. Briliya Jeyaseelan.**

# வேத வினாக்கள்

## எரேமியா 1 – 26 அதிகாரங்கள்
## (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. எந்த ராஜாவை கர்த்தர் தன் ஊழியக்காரர் என்று கூறினார்?
2. மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் தப்பாமல் கனிக்கொடுக்க என்ன செய்ய வேண்டும்?
3. எங்கே விதைக்க வேண்டும்?
4. ஜாதி ஜாதிக்கு பரம்புவது என்ன?
5. எந்த தீர்க்கதரிசி பயந்து எகிப்திற்கு போனான்?
6. யோயாக்கீமின் இரண்டாம் ஆண்டு ஆட்சி காலம், எரேமியா கர்த்தருடைய வார்த்தை உரைக்கும் எத்தனையாவது ஆண்டு ஆகும்?
7. நன்மையை தடுப்பது என்ன?
8. எதை ஜனங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள்?
9. நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு சொல்லப்பட்டவர் யார்?
10. சிறியோர் முதல் பெரியோர் வரை யாராய் இருக்கிறார்கள்?
11. எதைக் கர்த்தர் நிறைவேற்றுகிறார்?
12. யோசியாவின் குமாரன் யார்?
13. எந்த ராஜாவை கர்த்தர் தள்ளிவிட்டார்?
14. கோனியாவுக்கும், சல்லூமுக்குமான ஒற்றுமை என்ன?
15. எந்த ஊற்றை ஜனங்கள் விட்டுவிட்டார்கள்?
16. "நீ சாகவே சாக வேண்டும்" என்று யார் யாரிடம் சொன்னது?
17. கெட்டுப்போனதை குயவன் என்ன செய்தார்?
18. யார் துரோகி?
19. நான் பரிசுத்தவானல்ல, ஆனால் கர்த்தரால் பெயரிடப்பட்டேன். நான் யார்?
20. தேவன் எரேமியாவிடம் இரண்டு முறை கேட்ட ஒரே அர்த்தம் கொண்ட கேள்வி என்ன?
21. யோயாக்கீமின் குமாரன் யார்?
22. இஸ்ரவேல் ஜனத்தை எப்படி மோசம் போக்கினார்கள்?
23. கர்த்தருடைய கரத்திலிருந்து எரேமியா வாங்கியது என்ன?
24. யாரைப் போல இஸ்ரவேலர் தேவனுக்கு துரோகம் செய்தார்கள்?
25. எப்போது எரேமியாவைத் தேவன் தம்முடைய நாமத்தைக் கொண்டு பேசும்படி கட்டளையிட்டார்?
26. வேலைவாங்கிக் கூலி கொடாதவர் யார்?
27. நன்மை செய்த ஒருவருக்கு எதிராக எரேமியா தீமையாக பேசினார். நன்மை செய்த அவர் யார்?
28. எத்தனை ஆண்டுகளாக எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார்?
29. ஜாதிகள் எத்தனை வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்?
30. ஏன் யூதா இஸ்ரவேலை விட பாவியாக கருதப்பட்டான்?

## செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள் (*ஏசாயா 39– 66*)

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் *ஏசாயா 39– 66* |
|---|---|---|
| 1 | நமது தேவனுடைய வசனம் | 40:8 |
| 2 | இரண்டத்தனையாய்ப் பலன் வரும் | 61:7 |
| 3 | தமது மந்தையின் மேய்ப்பனாக | 63:11 |
| 4 | தூசியை | 52:2 |
| 5 | எத்தியோப்பியாவையும் சேபாவையும் | 43:3 |
| 6 | நீதி, யதார்த்தமானவைகள் | 45:19 |
| 7 | கொள்ளைப்பொருளினால் இடப்பட்ட தகனபலி | 61:8 |
| 8 | அழுக்கான கந்தைபோல | 64:6 |
| 9 | கோரேசைக் குறித்து | 44:28 |
| 10 | கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் | 51:11 |
| 11 | வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பார். | 45:4 |
| 12 | கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்க வேண்டும். | 66:2 |
| 13 | சாம்பலை | 44:20 |
| 14 | புது நாமத்தால் | 62:2 |
| 15 | அவர் நெருக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்த போது | 53:7 |

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் *ஏசாயா 39– 66* |
|---|---|---|
| 16 | ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி | 38:1 |
| 17 | மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும் | 45:9 |
| 18 | கல்தேயரின் குமாரத்தி (சுக செல்வி)<br>சந்தான சேதமும் விதவையிருப்பும் | 47:5<br>47:9 |
| 19 | இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் | 45:25 |
| 20 | வெளி. 22:12-க்குப் பொருத்தமான வசனம் | 62:11 |
| 21 | நீதியும் வல்லமையுமுண்டென்று | 45:24 |
| 22 | சுவிசேஷகனுடைய | 52:7 |
| 23 | கர்த்தரை சேவிக்கிற அந்நிய புத்திரர், அண்ணகர் | 56:3 |
| 24 | சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பை பிரசித்தப்படுத்தி, உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாய் இருக்கின்றன. | 52:7 |
| 25 | பதினைந்து வருஷம் | 38:5 |
| 26 | யெஷூரனே | 44:2 |
| 27 | சீயோனுக்கு | 51:3 |
| 28 | பூமி உருண்டையின்மேல் | 40:22 |
| 29 | ஏசாயா 59:16 | 63:5 |
| 30 | கண்டடையத்தக்க சமயத்தில் தேட வேண்டும்.<br>அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும். | 55:6 |

குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் ஒப்படைக்கவும்.

## செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs.Jeevamoni Joseph
2. Mrs.Priya Ranjith
3. Mrs. Manuel Sarah Foulkes Moore
4. Mrs. Jebaseeli Asir
5. Mrs. Sheeba Merlin
6. Mr.Lipny
7. Mrs.Subija Jino
8. Mrs.Jenila Gnanaraj
9. Mrs.Ajita Ebi
10. Mrs. Sheneega Stanely
11. Mrs. Febell Jeevagi Thomas
12. Mrs.Jenis Trison
13. Mrs.Helen Sharmila
14. Mrs. Percia David
15. Mrs. Annie Max
16. Mrs. Deepa Vincent
17. Mrs. Sharmila Rajesh
18. Mrs. Shiny Brindha Alwin
19. Ms.Persis Seljah
20. Mr. Emmanuel Vanya
21. Mrs.Annie Vigin
22. Mrs.Nithya Prince

## Children who answered September - 2022 Quiz

1. Aadhav Steve Matthew
2. Steffi Prisilla
3. Amy Jazzlyn
4. Keren Grapeson
5. Abner Theophiilus Grapeson
6. Juanita Carys.J
7. Jevlyn Ana
8. Johan Sam Manuel
9. Joha Anit Manuel
10. Gabrilyn Hannah
11. Jerilyn Pushpam Nelson
12. Andrew Jones Arun
13. Evelyn Gracia
14. Darion Lemuel
15. Geoffrey Jerome David
16. Jeya Jehosheba Mahear
17. Jeya Joshua Maher
18. Adelyn Victoria Jeyaseelan
19. Leona Juliet
20. Abryan Gabriel Jeyaseelan
21. Shawn Samuel
22. Sheena Samuel
23. Johanan Paul Jino
24. Joanna Paul Jino
25. Jonathan Geosper David
26. Leonel I.J. Stalin
27. Linuel I.J. Sherwyn
28. Phoebe Rebekah Solomon
29. Hadriel Adventier
30. Jen Scudd
31. Jim Scott
32. Janessa Max
33. Sam Jesvin
34. Jesse Grace
35. Giana Elin
36. Liana Erin
37. Jessica Eban

***Note :*** Submit the answers of Bible Quiz to Pastor uncle on or before 25th of every month.

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



**இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி**

**14-06-1912 – 20-01-1997**

**குடும்பத்தினருக்கு பிரியாவிடை**

ஈடித்தின் தங்கை கிரேஸ் அவரின் அரும்பெரும் தோழி. கிரேஸின் கணவர் ராணுவத்தில் வேலை செய்தார். எனவே அவர்கள் தொலைவில் குடியிருந்தனர். அவர்களோடு சில நாட்கள் தங்கியிருந்து விடைபெற வாஞ்சித்தார் ஈடித். காலம் குறுகியிருந்ததால், அவர்களை வழியில் ஓரிடத்திற்கு வரச் சொல்லி பயணத்திலேயே தன் நேச சகோதரியிடம் விடைபெற்றுக் கொண்டார். விமான வசதிகள் அதிகமில்லாத காலம் அது. தனது அவசிய உடைமைகளை கடல் மார்க்கமாகவே அனுப்பத் தீர்மானித்திருந்தார் ஈடித். ஏன், அவரே கடல்மார்க்கமாகத்தான் பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலை. ஊழியமே மிக உயர்ந்த உத்தியோகம் என்ற கருத்தில் ஊறியிருந்த அம்மாவும், உன்னதரே கிடைத்தற்கரிய அரும்பெரும் சொத்து என்ற உண்மையில் ஊறியிருந்த அப்பாவும் தங்கள் மூத்த மகளின் ஆயத்த வேலையில் அனுசரணையாக இருந்து வேகப்படுத்தினர். என்று பயணம், எந்த கப்பலில் பயணம் என எதுவுமே தெரிந்து கொள்ள முடியவில்லை. எனவே கப்பல் பயணத்திற்காக ஈடித் மட்டுமே தனியே புறப்பட்டார்.

கடல்கள், தேசங்கள் கடந்து இந்தியா வந்தடைய வேண்டும். அன்று அவர் தன் சொந்த ஊரையும் சொந்த பந்தங்களையும் விட்டு விட்டுப் பாரதம் கிளம்ப வேண்டிய நாள். மின்னியபோலிஸ் ரயில் நிலையம் தெரிந்தவர், தெரியாதவர், நண்பர், உறவினர் என ஈடித்தைச் சார்ந்த பெருங்கூட்ட மக்களால் நிரம்பி வழிந்தது. வர்த்தக ரீதியில் சென்றிருந்தால் வசூல் அள்ளித்தட்டும் மாடலாகப் பறந்திருப்பார் ஈடித். அன்றோ உயிருள்ள சாட்சியாய் அநேகரை நீதிக்கு

உட்படுத்துவோர் பிரகாசிப்பது போல் பிரகாசிக்கும் நட்சத்திரமய் ஜொலித்துக் கொண்டிருந்தார். உணர்ச்சிகளின் அலைமோதல் உள்ளத்தில். ஆனால் அந்த உள்ளத்தின் ஆழத்திலோ கர்த்தரை நம்புவோருக்கு மட்டுமே கிடைக்கும் மிகுந்த சமாதானம் நிலவியது.

பலரும் பல வார்த்தைகளை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தனர். ரயில் வரும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஈடித்தின் அம்மா திரளும் கண்ணீரை சாமர்த்தியமாக அடக்கிக் கொண்டிருந்தார். அடிக்கடி அழுது பழகாத அப்பாவோ கண்ணீரை அடக்கும் முயற்சியில் தோற்றுப்போய் மடையாய்க் கண்ணீர் வடித்தார். அப்பாவின் கண்களில் முதன் முதலாக அதுவும் இத்தனை அதிகமாய்க் கண்ணீரைப் பார்த்தது ஈடித்தின் உள்ளத்தை மிகவும் வருத்தியது. ஆனால் தீர்க்கமான முடிவு முதன்மையானதாய் நிற்க, அந்தக் கண்ணீரில் ஈடித் கரையவில்லை.

ஆம், இடம் பெயர்ந்து கலாச்சாரம் கடந்து சுவிசேஷம் சுமந்து செல்லும் நற்பணியாளர் தங்கள் அழைப்பிற்கிணங்குவதால் தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்யத் துணிகின்றனர். அவர்களை ஆசையாய்ப் பெற்று, ஆயிரம் கனவுகளுடன் வளர்த்து ஒரு காலக்கட்டத்தில் அத்தனை ஆசையையும் கனவையும் அர்ப்பணிப்பென்னும் பலிபீடத்தில் பரிசுத்தமாய் சுட்டெரித்து, தம் அன்புச் செல்வங்கள் ஆண்டவர் அழைப்பிற்கிணங்கி தொடங்கும் ஆயிரம் மைல் பயணத்திற்கு ஆதரவு தந்து அனுப்பும் பெற்றோரே மகா பெரிய தியாகிகள்.

**நியூயார்க் வந்தடைந்த மங்கையர்கள்**

நியூயார்க் பட்டணத்தில் ஈடித்துடன் மேரி, எஸ்தர், வெர்ஜீனியா என்ற மற்ற மூன்று இளம் பெண்களும் இந்தியா செல்வதற்காக இணைந்தனர். ஈடித்தைப் போல அவர்களும் தனியாகவே வந்திருந்தனர். ஜப்பான் யுத்தம் கடுமையாக நடந்து கொண்டிருக்கும் காலம் அது. 'ஓரடி மட்டும் என் முன் காட்டுமே' என்ற பாடல், அந்தச் சூழ்நிலையிலிருந்த இந்த வாலிபப் பெண்களுக்கு மிகப்பொருத்தம். ஏனென்றால் இரண்டாம் மகா யுத்த நாட்களில் ஊழியத்திற்காகக் கடல் கடந்து இந்தியா செல்லத் துணிந்த இந்த இளம் மங்கையருக்கு அடுத்த அடி அறியாமுடியா புதிர்.

எல்லாவற்றையும் திட்டம் தீட்டி, நேரம் கணித்து, செவ்வையாய்ச் செய்து பழகிய ஈடித்திற்கு இந்த அறிகுறியற்ற அடிச்சுவடுகள் இல்லா பாதை முற்றிலும் முரண்பாடான அனுபவம். இந்தச் சூழ்நிலையிலும் அவர் பக்குவப்பட்ட மனநிறைவோடு நிதானமாய் இருந்தார். மூட்டை முடிச்சுகளோடு அப்பெரிய நியூயார்க் பட்டணத்தில் தனித்து விடப்பட்ட இந்த மங்கையருக்கு அப்பெரிய நியூயார்க் பட்டணத்தில் தனித்து விடப்பட்ட இந்த மங்கையருக்கு மூச்சு விடுவதைத் தவிர வேறெதையும் ஒழுங்கான நேரத்தில் செய்ய முடியாத சூழ்நிலை. அந்த பதட்ட காலத்திலும் உலகம் தராத சமாதானத்தை அனுபவித்தவண்ணம் வழிகளிலெல்லாம் தன்னை அழைத்த அந்த இயேசு கிறிஸ்துவையே நினைத்துக் கொண்டு பதறாமலிருந்தார் ஈடித்.

- தொடரும்

## பாடல் பிறந்த கதை

### *எத்தனை நாவால் பாடுவேன் [பாமாலை 388]*

### *(O for a thousand tongues to sing)*



*1. எத்தனை நாவால் பாடுவேன்*
*என் மீட்பர் துதியை*
*என் ஆண்டவர் என் ராஜனின்*
*மேன்மை மகிமையை.*

*2. பாவிக்கு உந்தன் நாமமோ*
*ஆரோக்கியம் ஜீவனாம்*
*பயமோ துக்க துன்பமோ*
*ஓட்டும் இன்கீதமாம்.*

**'என் நாவு உமது நீதியையும், நாள் முழுதும் உமது துதியையும் சொல்லிக்கொண்டிருக்கும்' சங் 35:28.**

*நமது எல்லா அவயவங்களையும் கடவுள் தமது மகிமைக்காக உபயோகிப்பதற்காகவே நமக்கு அருளியிருக்கிறார். நமது குழந்தைகள், 'ரெண்டு சிறு கண்கள்' என ஆரம்பிக்கும் பாடல் ஒன்றைப் பாடுவதைக் கேட்டிருக்கிறோம். அதில், 'ஓர் சின்ன நாவு அவர் சத்யம் பேச' என்னும் ஒரு வரி உண்டு. நமது நாவுகள் கடவுளைத் துதிப்பதற்காகவே அருளப்பட்டிருக்கின்றன. இப்பாடலை எழுதியவர் முதல் கவியில் (ஆங்கிலத்தில்) ஆயிரம் நாவுகள் இருக்க விரும்புகிறார். ஆயினும், நமக்கிருக்கும் ஒரே நாவை நாம் சரியான முறையில் உபயோகிக்கிறோமா? யாக்கோபு நிருபத்தில் மூன்றாம் அதிகாரத்தில் நாவு எவ்வளவு பயங்கரமான செய்கைகளைச் செய்யக்கூடும் என விவரிக்கப்பட்டிருக்கிறது. அது அடக்கமுடியாத ஒரு மிருகத்துக்குச் சமமானது. ஒரே நாவினால் கடவுளைத் துதித்து, அவர் சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதனை சபிக்கிறோம். 'துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது' (யாக் 3:10). ஒருவர் ஆயிரம் நாவினால் கடவுளைத் துதிப்பதைவிட ஆயிரம் பேர் தங்கள் ஒவ்வொரு நாவினால் அவருக்கு சேவை செய்வதையே கடவுள் விரும்புகிறார். நியாயத்தீர்ப்பு நாளில் கடவுள் முன்னால் நிற்கும்போது, அவர் அளித்த நாவை எவ்விதம் பயன்படுத்தினோம் என்னும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.*

மெதடிஸ்டு சபையை ஸ்தாபித்த சார்ல்ஸ் வெஸ்லி (Charles Wesley) என்பவர் இரட்சிக்கப்பட்ட நாளின் முதல் ஆண்டு நிறைவு 1738ம் ஆண்டு மே மாதம், 21ம் தேதியாகும். இத்தினத்தின் ஞாபகார்த்தமாக ஒரு துதிப்பாடல் எழுத ஆவல்கொண்டு, பதினெட்டு கவிகளுள்ள ஒரு பாடல் எழுத ஆரம்பித்தார். ஆறு கவிகள் எழுதியவுடன், சில தினங்களுக்கு முன் தனது நண்பரான பீட்டர் போலர் என்பவருடன் செய்த ஒரு சம்பாஷணை அவர் ஞாபகத்துக்கு வந்தது. இருவரும் 'கடவுளைத் துதித்தல்' என்னும் பொருளைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, 'ஆயிரம் நாவுகள் எனக்கிருந்தாலும், அவை அத்தனையும் கொண்டு கடவுளையே துதிப்பேன்' என்று பீட்டர் போலர் சொல்லியிருந்தார். இதை ஆதாரமாகக் கொண்டு, 'O for a thousand tongues to sing' என ஏழாவது கவியை ஆரம்பித்து, மீதிக் கவிகளையும் எழுதிப் பாடலை முடித்தார். இப்பாடலைப் பார்த்ததும், சார்ல்ஸ் வெஸ்லியின் மூத்த சகோதரனான ஜான் வெஸ்லி, முதல் ஆறு கவிகளையும் நீக்கிவிட்டு, ஏழாவது கவிமுதல், ஐந்து கவிகளை மட்டும் ஒரு பாடலாக வைத்துக்கொண்டார். மெதடிஸ்டு சபையின் பாட்டுப்புத்தகத்தில் இப்பாடலே முதல் பாடலாக வைக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்குப்பின், இப்பாடலில் சில மாற்றங்கள் செய்ய ஆரம்பித்தனர். இறுதியில், வெஸ்லி முதலில் எழுதிய வார்த்தைகளே வைக்கப்பட்டன.

இப்பாடலை எழுதிய சார்ல்ஸ் வெஸ்லி என்பவர், மெதடிஸ்டு சபையை ஸ்தாபித்தவரான ஜான் வெஸ்லியின் இளைய சகோதரன். அவர், சாமுவேல் வெஸ்லி என்னும் ஆங்கிலச் சபைப் போதகரின் பதினெட்டாவது குழந்தையாக, 1707ம் ஆண்டு டிசம்பர் மாதம், 18ம் தேதி, இங்கிலாந்தில் எப்வெர்த் குருடனையில் பிறந்தார். இளவயதில் வெஸ்ட்மினிஸ்டர் பள்ளியிலும், பின்னர் ஆக்ஸ்வர்ட் பல்கலைக்கழகத்திலும் பயின்று 1729ல் பட்டம் பெற்றார். கல்லூரியில் பயிலும்போது, சில மாணவர்களுடன் சேர்ந்து, 'ஆக்ஸ்வர்ட் மெதடிஸ்டுகள்' என்னும் ஒரு கிறிஸ்தவக் குழுவை ஆரம்பித்தார். இக்குழுவே பிற்காலத்தில் 'மெதடிஸ்டு சபையாகத் தோன்றியது. அமெரிக்காவில் ஜியார்ஜியா மாகாணத்தில் உழைத்த ஆக்ஸ்தார்ப் என்பவருக்குச் செயலாளராக வெஸ்லி இரு ஆண்டுகள் பணியாற்றியபின் இங்கிலாந்துக்குத் திரும்பி, நற்செய்திப் பணியை மேற்கொண்டார். ஆயினும், பாடல்கள் எழுதுவதையே தன் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு, 6500'க்கு அதிகமான பாடல்கள் எழுதியுள்ளார். அவர் 1788ம் ஆண்டு, மார்ச் மாதம், 29'ம் தேதி தமது 81'வது வயதில் லண்டன் மாநகரில் மறுமைக்குட்பட்டார்.

# ஆலய பக்கம்

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் அக்டோபர் – 2022



| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | ஞாயிறு | 12.00 noon- 1.00 pm | உபவாச ஜெபக்கூடுகை - ஆயர் இல்லம் |
| | | 6.00 pm – 7.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா - சோபியா சாலமோன் இல்லம் |
| 4 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 7 | வெள்ளி | 9.15 pm – 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's Church – Church day & Choir day |
| 11 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 14 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 16 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 18 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 21 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 23 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 25 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 28 | வெள்ளி | 9.15 pm – 10.15pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 31 | திங்கள் | 11.45pm | மாத இறுதி ஜெபம் - ஆயர் இல்லம் |

ONLINE BOOKING

ஆலய ஆராதனையில் பங்கு பெற முன்பதிவு செய்வதற்கான இணைப்பு




# BIBLE READING FOR CHILDREN – OCTOBER 2022

| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.10.22 | MARK | 14 : 43 – 47 |
| 2.10.22 | MARK | 14 : 48 – 52 |
| 3.10.22 | MARK | 14 : 53 – 58 |
| 4.10.22 | MARK | 14 : 59 – 65 |
| 5.10.22 | MARK | 14 : 66 – 72 |
| 6.10.22 | MARK | 15 : 1 – 5 |
| 7.10.22 | MARK | 15 : 6 – 15 |
| 8.10.22 | MARK | 15 : 16 – 20 |
| 9.10.22 | MARK | 15 : 21 – 26 |
| 10.10.22 | MARK | 15 : 27 – 32 |
| 11.10.22 | MARK | 15 : 33 – 41 |
| 12.10.22 | MARK | 15 : 42 – 47 |
| 13.10.22 | MARK | 16 : 1 – 5 |
| 14.10.22 | MARK | 16 : 6 – 11 |
| 15.10.22 | MARK | 16 : 12 – 15 |
| 16.10.22 | MARK | 16 : 16 – 20 |
| 17.10.22 | LUKE | 1 : 1 – 7 |
| 18.10.22 | LUKE | 1 : 8 – 15 |
| 19.10.22 | LUKE | 1 : 16 – 25 |
| 20.10.22 | LUKE | 1 : 26 – 32 |
| 21.10.22 | LUKE | 1 : 33 – 38 |
| 22.10.22 | LUKE | 1 : 39 – 45 |
| 23.10.22 | LUKE | 1 : 46 – 56 |
| 24.10.22 | LUKE | 1 : 57 – 66 |
| 25.10.22 | LUKE | 1 : 67 – 74 |
| 26.10.22 | LUKE | 1 : 75 – 80 |
| 27.10.22 | LUKE | 2 : 1 – 7 |
| 28.10.22 | LUKE | 2 : 8 – 15 |
| 29.10.22 | LUKE | 2 : 16 – 21 |
| 30.10.22 | LUKE | 2 : 22 – 29 |
| 31.10.22 | LUKE | 2 : 30 – 38 |

## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - அக்டோபர் 2022




| தேதி | நாள் | காலை | மாலை |
|---|---|---|---|
| 1 | சனி | சகரியா 10 : 1 – 12 | யூதா 1 : 1 – 16 |
| 2 | ஞாயிறு | சகரியா 11 : 1 – 8 | யூதா 1 : 17 – 25 |
| 3 | திங்கள் | சகரியா 11 : 9 – 17 | வெளி. 1 : 1 – 8 |
| 4 | செவ்வாய் | சகரியா 12 : 1 – 14 | வெளி. 1 : 9 – 20 |
| 5 | புதன் | சகரியா 13 : 1 – 9 | வெளி. 2 : 1 – 11 |
| 6 | வியாழன் | சகரியா 14 : 1 – 10 | வெளி. 2 : 12 – 29 |
| 7 | வெள்ளி | சகரியா 14 : 11 – 21 | வெளி. 3 : 1 – 13 |
| 8 | சனி | மல்கியா 1 : 1 – 14 | வெளி. 3 : 14 – 22 |
| 9 | ஞாயிறு | மல்கியா 2 : 1 – 9 | வெளி. 4 : 1 – 11 |
| 10 | திங்கள் | மல்கியா 2 : 10 – 17 | வெளி. 5 : 1 – 14 |
| 11 | செவ்வாய் | மல்கியா 3 : 1 – 9 | வெளி. 6 : 1 – 8 |
| 12 | புதன் | மல்கியா 3 : 10 – 18 | வெளி. 6 : 9 – 17 |
| 13 | வியாழன் | மல்கியா 4 : 1 – 6 | வெளி. 7 : 1 – 8 |
| 14 | வெள்ளி | ஆதி. 1 : 1 – 15 | வெளி. 7 : 9 – 17 |
| 15 | சனி | ஆதி. 1 : 16 – 31 | வெளி. 8 : 1 – 13 |
| 16 | ஞாயிறு | ஆதி. 2 : 1 – 12 | வெளி. 9 : 1 – 10 |
| 17 | திங்கள் | ஆதி. 2 : 13 – 25 | வெளி. 9 : 11 – 21 |
| 18 | செவ்வாய் | ஆதி. 3 : 1 – 13 | வெளி. 10 : 1 – 11 |
| 19 | புதன் | ஆதி. 3 : 14 – 24 | வெளி. 11 : 1 – 10 |
| 20 | வியாழன் | ஆதி. 4 : 1 – 16 | வெளி. 11 : 11 – 19 |
| 21 | வெள்ளி | ஆதி. 4 : 17 – 26 | வெளி. 12 : 1 – 8 |
| 22 | சனி | ஆதி. 5 : 1 – 32 | வெளி. 12 : 9 – 17 |
| 23 | ஞாயிறு | ஆதி. 6 : 1 – 8 | வெளி. 13 : 1 – 9 |
| 24 | திங்கள் | ஆதி. 6 : 9 – 22 | வெளி. 13 : 10 – 18 |
| 25 | செவ்வாய் | ஆதி. 7 : 1 – 24 | வெளி. 14 : 1 – 10 |
| 26 | புதன் | ஆதி. 8 : 1 – 22 | வெளி. 14 : 11 – 20 |
| 27 | வியாழன் | ஆதி. 9 : 1 – 15 | வெளி. 15 : 1 – 8 |
| 28 | வெள்ளி | ஆதி. 9 : 16 – 29 | வெளி. 16 : 1 – 10 |
| 29 | சனி | ஆதி. 10 : 1 – 32 | வெளி. 16 : 11 – 21 |
| 30 | ஞாயிறு | ஆதி. 11 : 1 – 15 | வெளி. 17 : 1 – 9 |
| 31 | **திங்கள்** | **ஆதி. 11 : 16 – 32** | வெளி. 17 : 10 – 18 |

# ஆராதனை பாடல்கள் - அக்டோபர் 2022

| | |
|---|---|
| 07-10-22 | |
| பாமாலை - 267 | போற்றும் போற்றும் புண்ணிய |
| பாமாலை - 367 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை – 303 | எந்நாளுமே துதிப்பாய் |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| 14-10-22 | |
| பாமாலை - 9 | பூலோகத்தாரே |
| பாமாலை - 258 | இயேசுவே உம்மை தியானித்தால் |
| கீர்த்தனை – 153 | இயேசுவே கிருபாசனப் பதியே |
| கீர்த்தனை – 322 | சூரியன் மறைந்து |
| 21-10-22 | |
| பாமாலை - 21 | சேனையின் கர்த்தா |
| பாமாலை - 264 | நல் மீட்பர் இயேசு நாமமே |
| கீர்த்தனை – 237 | தந்தானை துதிப்போமே |
| மங்கள கவி – 2 | கர்த்தர் தந்த ஈவுக்காக |
| 28-10-22 | |
| பாமாலை - 10 | போற்றிடு ஆன்மமே |
| பாமாலை - 326 | ரட்சா பெருமானே பாரும் |
| கீர்த்தனை – 380 | கர்த்தரை நம்பியே ஜீவிப்போம் |
| | நீங்காதிரும் மா நேச கர்த்தரே |

## திருமறை பாட ஒழுங்குகள் - அக்டோபர் 2022

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 07-10-22 | அன்பில் ஒன்றிணைதல் | உபாகமம் 4:1-10 | 1கொரி 1:10-18 | யோவான் 15:11-17 | 30 |
| 14-10-22 | மாற்றுத்திறனாளிகள் மீது அக்கறையும் கனம் பண்ணுதலும் | 2 சாமு. 9 : 1 - 13 | அப். 9:32–35 | மாற்கு 3 : 1-6 | 146 |
| 21-10-22 | நுகர்வு கலாச்சாரமும் கிறிஸ்தவர்களின் பொறுப்பும் | ஆதி. 3: 1 - 7 | பிலி. 3 :17 - 21 | மத்தேயு 6: 25 - 34 | - |
| 28-10-22 | சீர்திருத்த ஞாயிறு கடவுளின் ஆளுகை, நீதியும் சமாதானமும் | யாத். 7 : 1 - 7 | ரோமர் 13: 1 - 7 | யோவான் 18 :33 - 38 | 89:1-18 |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக் குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule (Online) |
|---|---|---|---|
| 04-10-22 | சங்கீதம் | 69 | TCA & Madinat Zayed – 8pm to 9pm |
| 11-10-22 | சங்கீதம் | 70 | Musaafa & Muroor – 8pm to 9pm |
| 18-10-22 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 25-10-22 | சங்கீதம் | 71 | Hamdan & Al Wadha 8pm to 9pm |

<u>கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு</u>



# BIRTHDAY - OCTOBER 2022




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Leslie Manohar Isaac. W |
| 1 | Master. | Ashwin P |
| 1 | Mr. | J. Manuel Raj John |
| 2 | Dr. | Rajakumar Manickam |
| 2 | Mr. | Yesudian Nayagam Eban |
| 3 | Ms. | Gabrilyn Hannah |
| 5 | Mr. | Samuel John Dinakaran |
| 5 | Ms. | Hansi Jesinth Rajarigam |
| 6 | Mrs. | Sheeba Herlin. S |
| 6 | Mrs. | Melba Mercy Jeen |
| 7 | Mr. | Camryn Robert |
| 8 | Mr. | Ranjith Kumar. J |
| 9 | Mr. | Yuvesh Ray |
| 9 | Mr. | Prabhu Selvanayagam |
| 10 | Mrs. | Agila Shalini |
| 11 | Mrs. | Jebaseeli Idah Hannah |
| 11 | Mrs. | Hepsiba Jeni. M |
| 11 | Mr. | Davidson. P |
| 11 | Mrs. | Sujatha Ruban J |
| 11 | Ms. | Adora Mariam Glady |
| 13 | Miss | Diyas Dinesh |
| 14 | Mrs. | Jansi Rajkumar |
| 14 | Master. | Abishek Samuel |
| 14 | Ms. | Gifty Chris |
| 15 | Master. | Kevin Paul Crishanth |
| 16 | Mrs. | Jebarlin Sheneegah |
| 17 | Mrs. | Vanitha Stella |
| 20 | Baby. | Alston Elvin Paul |
| 21 | Mr. | Benjemen Elengovan |
| 22 | Master. | Joshua Mahear |
| 22 | Ms. | Niwisha |
| 23 | Mr. | Ramesh Prabahardhas |
| 24 | Mr. | Rajkumar G |
| 26 | Baby. | Shiona Binara.S |
| 27 | Master. | Geoffrey Jerome |
| 28 | Mrs. | Sara Santhakumari Elengovan |
| 29 | Mrs. | Deena Gifty Nishanth |
| 30 | Mr. | Fernandez. J |

## Wedding Anniversary – October 2022




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| **2** | Mr. & Mrs. | RAJESH T |
| **2** | Mr. & Mrs. | VIVIN ALFRED |
| **21** | Mr. & Mrs. | JOSE WESLY. J |
| **26** | Rev. & Mrs. | JERI RAJKUMAR |




RUWAIS
CSI CHURCH
7th
ANNIVERSARY


skin

















CSI






உன் வழியைக்
கர்த்தருக்கு ஒப்புவித்து,
அவர்மேல் நம்பிக்கையாயிரு;
அவரே காரியத்தை
வாய்க்கப்பண்ணுவார்.
சங்கீதம் 37:5